சாதாரணக் கூட்டம்

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.11.2021 | **பொருள் எண் 1**<br>கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2020ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு ஆணை எண் 90 நாள் 27.10.2021ன்படி சாலைகள், பூங்கா மற்றும் குளங்கள் மேம்பாடு போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு ஆணை எண் 92 நாள் 30.10.2021ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட சாலைப்பணிகள் மேற்கொள்ள 1)கோரையாறு ஆற்றங்கரை சாலை, 2) தென்றல் நகர் இரண்டாவது தெரு, மூன்றாவது தெரு, ஐந்தாவது தெரு மற்றும் உமர் ஒலி நகர் குறுக்கு தெரு 3) மஜீத் ரஹ்மான் தெருவில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்றும் பணிகளுக்கு 2.381 கி.மீட்டர் நீளத்தில் ரூ.204.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான தொழில்நுட்ப அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கலாம். (ந.க.எண். 728//2021//இ1) | தீர்மானம் எண்:-965<br>**ஏற்கப்பட்டது** |
| 30.11.2021 | **பொருள் எண் 2**<br>கூத்தாநல்லூர் நகராட்சியில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு மேலாண்மை வரைவு உபவிதிகள் இந்நகராட்சியில் செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.21978-9/2020/பாசாதி-2, நாள்.31.12.2020 படியும் வரைவு துணை விதிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி உபவிதிகள் திருவாரூர் மாவட்ட அரசிதழில் 11.08.2021 ம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டது. 29.09.2021ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் பொது மக்களிடம் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை கோரப்பட்டது. அதன் மீது எவ்வித ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்படவில்லை. எனவே மேற்படி உபவிதிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இறுதி செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1695/2018/இ1) | தீர்மானம் எண்:-966<br>**ஏற்கப்பட்டது** |
| 30.11.2021 | **பொருள் எண் 3**<br>கூத்தாநல்லூர் நகராட்சியானது திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 12.31 கி.மி பரப்பளவில், 24 வார்டுகளுடன், சுமார் 6903 குடியிருப்புகளும், மற்றும் 25423 மக்கள் தொகையும் கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 365 சாலைகள், தெருக்கள் உள்ளன. நகராட்சி சாலைகளின் மொத்த நீளம் 65.086 கி.மீ ஆகும். மழைநீர் வடிகால் 9.45 கி.மி பராமரிக்கப்படுகிறது. நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி 4.5 மெட்ரிக் டன் மக்கும் குப்பையும் 2.5 மெட்ரிக் டன் மக்காத குப்பையும் ஆக மொத்தம் 7 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தியாகிறது. வீடுவீடாக குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அதனால் பொது சுகாதாரப்பிரிவில் பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. மேலும், இந்நகராட்சியின் உள்ளூர் குடிநீர் ஆதாரம் 10 ஆழ்துளை கிணறுகள் மூலமாக மூன்று எண்ணிக்கையிலான மினி நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 2 எண்ணிக்கையிலான மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டிகள் மூலமாக 2.29 MLD நீரேற்றம் செய்து பொதுமக்களுக்கு 90 LPCD அளவில் தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/ EA-2, நாள் 02.10.2021 தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பொது சுகாதாரம் மற்றும் தூய்மை பணி மேற்கொள்ளவும், குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணிகளுக்கும், கீழ்குறிப்பிட்டவாறு தற்போதுள்ள நிரந்தர பணியாளர்களை தவிர்த்து | தீர்மானம் எண்:-967<br>**ஏற்கப்பட்டது** |

தேவைப்படும் கூடுதல் பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையுல் பணியமர்த்தவும், அதற்கான செலவினங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கிடவும், முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

## பொது சுகாதாரப்பணியாளர்கள்

| வ.எண். | விபரம் | தூய்மை பணியாளர்கள் | ஓட்டுநர் | தூய்மைபணி மேற்பார்வையாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | 78 | 10 | 12 |
| 2 | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 18 | 4 | 1 |
| 3 | இடைவெளி (Gap) | 60 | 6 | 11 |
| 4 | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 60 | 2 | 11 |
| 5 | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் | 461.00 | 708.00 | 562.00 |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | ரூ.126.90 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | ரூ.150.39 இலட்சம் |

**குடிநீர் விநியோகப் பணியாளர்கள்**

| வ.எண். | விபரம் | பராமரிப்பு பணியாளர் **(Maintenance Worker)** |
|---|---|---|
| 1 | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | 6 |
| 2 | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | 0 |
| 3 | இடைவெளி (Gap) | 6 |
| 4 | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 6 |
| 5 | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் | 581.00 |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | ரூ.12.03 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | ரூ.14.25 இலட்சம் |

அலுவலக குறிப்பு –

பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியர் மூலம்

| | | |
|---|---|---|
| | ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக் கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.15039 இலட்சம் மற்றும் பொறியியல் பிரிவு குடிநீர் பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக்கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.14.25 இலட்சத்திற்கும், நிர்வாக அனுமதி கோரும் கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிட ஒப்புதல் அளிக்கலாம்<br>(ந.க.எண். 792/2021/□□□1) | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரணக் கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற <u>சாதாரணக்</u> கூட்ட நடவடிக்கைகள்

| **மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்** | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|
| 30.11.2021 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது அக்டோபர் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:-968<br>**ஏற்கப்பட்டது** |
| 30.11.2021 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது அகடோபர் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:-969<br>**ஏற்கப்பட்டது** |
| 30.11.2021 | **பொருள் எண் 3**<br>இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக 23 பணியாளர்களை தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்துடன் உரிமக் காலம் எதிர்வரும் 30.11.2021 உடன் முடிவடைகிறது. தற்போது மழைக்காலம் தொடங்கி உள்ளதாலும், டெங்கு நோயினை கட்டுப்படுத்த வேண்டி உள்ளதாலும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே 23 தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் தீ-கரன் சோசியல் நிறுவனத்திற்கு 01.12.2021 முதல் 28.02.2021 வரை மேற்கண்ட பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு நீடிப்பு செய்ய ஆகும உத்தேச செலவினம் தொகை ரூ.10,83,706/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 445/2020/எச்1) | தீர்மானம் எண்:-970<br>**ஏற்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.11.2021 | **பொருள் எண் 4**<br>இந்நராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 52 தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் நாள் 31.08.2021ல் ரூ.26,00,000/-க்கு மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விகித அடிப்படையில் மேற்படி 52 பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள தீர்மாணிக்கப்பட்டு தீ-கரன் சமூக தொண்டு நிறுவனம் மூலம் 01.09.2021 முதல் 31.11.2021 வரை பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. மேலும், ஒப்பந்த காலம் முடிவடைவதாலும், தற்போது கொரோனா வைரஸ் மற்றும் தேர்தல் காரணமாகவும் புதிய ஒப்பந்தபுள்ளி<br>கோர இயலாததால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிக்காலம் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 52 தூய்மை பணியாளர்களின் ஒப்பந்தகாலம் முடிவடைவதால் மேற்கண்ட பணியாளர்களை வழங்கி வரும் அதே நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்திலேயே தூய்மை பணியாளர்களை 01.12.2021 முதல் 28.02.2022 முடிய மூன்று மாதங்களுக்கு வழங்கிட ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.24,81,083/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.12.2021 முதல் 28.02.2022 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 445/2020/எச்1) | தீர்மானம் எண்:-971<br>**ஏற்கப்பட்டது** |

30.11.2021

**பொருள் எண் 5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த மினி லாரி பழுதடைந்துவிட்டதால் மேற்படி TN50 1550 மினி லாரி வாகனத்திற்கு 30.11.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஏலம் விடும் வாகனத்தின் எண் | ஒப்பந்த்தாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | TN50 1550 மினி லாரி | 33,000/- |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 30,000/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனம் கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ளது. மேலும் நேரடியாக ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. எனவே வரப்பெற்ற இரணடு ஒப்பந்தபுள்ளிகளில் அதிக ஏலத்தொகை அளித்துள்ள நிறுவனத்திற்கு பழைய வாகனத்தினை எடுத்துச் செல்ல மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

கூடுதல் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 423/2015/எச்1)

தீர்மானம் எண்:-972

**ஏற்கப்பட்டது**

<table>
<tr>
<td>30.11.2021</td>
<td>
பொருள் எண் 6<br>
இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த மினி லாரி பழுதடைந்துவிட்டதால் மேற்படி TN51X3572 மினி லாரி வாகனத்திற்கு 30.11.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஏலம் விடும் வாகனத்தின் எண்</th><th>ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td rowspan="2">TN51X3572 மினி லாரி</td><td>32,000/-</td></tr>
<tr><td>2</td><td>கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td>29,000/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனம் கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ளது. மேலும் நேரடியாக ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. எனவே வரப்பெற்ற இரணடு ஒப்பந்தபுள்ளிகளில் அதிக ஏலத்தொகை அளித்துள்ள நிறுவனத்திற்கு பழைய வாகனத்தினை எடுத்துச் செல்ல மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு<br>
கூடுதல் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண். 1757/2014/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:-973<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.11.2021 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த மினி லாரி பழுதடைந்துவிட்டதால் மேற்படி TN50A 2291 டேங்கர் லாரி வாகனத்திற்கு 30.11.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>[Table: வ. எண் / நிறுவனத்தின் பெயர் / ஏலம் விடும் வாகனத்தின் எண் / ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்) — 1 / ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி / TN50A 2291 டேங்கர் லாரி / 35,000/- ; 2 / கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி / (same) / 32,000/-]<br><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனம் கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ளது. மேலும் நேரடியாக ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. எனவே வரப்பெற்ற இரணடு ஒப்பந்தபுள்ளிகளில் அதிக ஏலத்தொகை அளித்துள்ள நிறுவனத்திற்கு பழைய வாகனத்தினை எடுத்துச் செல்ல மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>கூடுதல் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 155/2015/எச்1) | தீர்மானம் எண்:-974<br>**ஏற்கப்பட்டது** |
| 30.11.2021 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சி பகுதியில் எதிர்வரும் 29.10.2021 முதல் கனமழை மற்றும் அதிக கனமழை பெய்ய உள்ளதாக வானிலை மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, அவசர காலங்களில் மக்கள் தங்குவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நிவாரண மையங்களை கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படவேண்டும். மேலும் கிருமிநாசினிகளை போதிய அளவில் இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கொரோனா தடுப்பு பணிகளுக்கும், கொள்ளைநோய்கள் தடுப்பு பணிகளுக்கும் மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கும் கீழ் குறிப்பிட்டுள்ள பொருட்கள் உடனடியாக இருப்பில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே அத்தியாவசியம் கருதி கீழ்கண்ட பொருட்களான கிருமிநாசினிகள் மற்றும் இதர தேவையான பொருட்களை உடன் வாங்கி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி உள்ளது.<br><br>[Table: வ.எண். / பொருளின் பெயர் / அளவு — 1 / பிளிச்சிங் பவுடர் / 2000 கிலோ ; 2 / சுண்ணாம்பு / 5000 கிலோ ; 3 / முக்கவசம் / 10000 எண்ணிக்கை ; 4 / மழைகோட் / 120 எண்ணிக்கை ; 5 / கேஸ் லைட் / 2 எண்ணம் ; 6 / டெக்னிக்கல் மாலத்தியான் / 20 லிட்டர் ; 7 / டெங்கு ஸ்டிக்கர் / 4000 எண்ணிக்கை ; 8 / பயன்படுத்திய சிமெண்ட் சாக்கு (பழையது) / 5000 எண்ணிக்கை]<br><br>மேற்கூறிய பொருட்களை உடனடியாக பொது சுகாதார அவசியம் கருதி வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு | தீர்மானம் எண்:-975<br>**ஏற்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 819/2021/எச்1) | |
| 30.11.2021 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தற்போது இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் எண் TN 50 U 0518 க்கு 29.12.2021உடன் ஆய்வு சான்று முடிவடைகிறது. மேலும் ஓர் ஆண்டிற்கு வாகனத்தின் பழுது நீக்கம் செய்திடவும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,10,000/- ஆகும். மேலும் அவ்வாகனத்திற்குரிய குப்பை ஏற்றும் பெட்டிகள் குறைவாக உள்ள காரணத்தால் 5 பெட்டிகள் பழுது பார்த்து புதுப்பிப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.1,10,000/- ஆகும். எனவே வாகனத்திற்குரிய பழுதுகளை நீக்கி ஆய்வு பெறவும் குப்பை ஏற்றும் 5 பெட்டிகள் பழுது பார்த்திடவும் மொத்த செலவினம் ரூ.2,20,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 867/2021/எச்1) | தீர்மானம் எண்:-976<br>**ஏற்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி